**நஷனல் ஜெம் அன்ட் ஜுவல்லறி அதொரட்டி – லங்கா ஜேமொலொஜிக்கல் லபொரட்ரி (பிறைவேட்) லிமிட்டட்டின்-2018/2019**

---

நஷனல் ஜெம் அன்ட் ஜுவல்லறி அதொரட்டி – லங்கா ஜேமொலொஜிக்கல் லபொரட்ரி (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2018 ஏப்ரல் 01 தொடக்கம் 2019 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கான செயற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாகவும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் சேர்த்து விதிகளில் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் இதற்கு மேலதிகமாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஆறு மாதங்களினுள் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பொறுப்பான நபரால் உறுதிப்படுத்தப்படுவதை கம்பனிப் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

**2.1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.1.2 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **புத்தகங்கள் மற்றும் கணக்குகளைப் பேணுதல்**<br>கம்பனியால் பேணப்பட வேண்டிய பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் 2014 ஏப்ரல் 01 தொடக்கம் 2019 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை.<br>(i) காசு / வங்கிப் புத்தகங்கள்<br>(ii) பேரேட்டுக் கணக்குகள்<br>(iii) நாட்குறிப்புக்கள்<br>(iv) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்<br>(v) உரிய பதிவேடுகள்<br>(vi) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 2.2.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாய்லாந்து மற்றும் ஜேர்மனிக்கான பிரயாணங்கள் தொடர்பாக முறையே ரூபா 369,440 மற்றும் ரூபா 1,032,887 தொகையான கட்டணங்கள் கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளரின் சார்பில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தன. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருமான வரிக்காக பதிவு செய்வதற்காக அல்லது வருமான வரி செலுத்துவதற்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 14,619,695 மற்றும் ரூபா 4,784,831 தொகையான முறையே வருமான வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்வதற்கும் வருமான வரி செலுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி 2018 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கம்பனி அமைப்பு அகவிதியின் 4 ஆம் பந்தியில் பின்வரும் நோக்கங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு செயற்பாட்டு நடவடிக்கைகளும் நாளதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அந் நோக்கங்கள் கம்பனியால் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) இரத்தினக்கற்கள், விலைமதிப்புமிக்க மற்றும் பகுதியளவில் விலைமதிப்புமிக்க கற்கள், செயற்கை சேர்மானக் கற்கள், உலோகங்கள், தாதுப்பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் ஏதேனும் ஏனைய தாதுப்பொருட்கள் அல்லது ஏதேனும் பொருட்கள் என்பவற்றினை பரீட்சித்து சான்றளிப்பதற்காகவும் கருத்துரைகள், விலைமதிப்பீட்டுச் சான்றிதழ்கள், அறிக்கைகள் போன்றவற்றினை வழங்குவதற்காகவும் சர்வதேச நியம தரத்திலான ஆய்வுகூடமொன்றை இலங்கையில் ஸ்தாபித்து செயற்படுத்துதல். | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ii) அறிவியல் பூர்வமான, நியாயமான மற்றும் பாகுபாடில்லாத தொழிற்பாடுகளினையுடைய நிறுவனமொன்றாக குறித்த ஆய்வுகூடத்தில் நம்பகத்தன்மையுடன் பதிலளிப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு இயலக்கூடியவாறு அதன் செயற்பாடுகளில் குறித்த ஆய்வுகூடத்தின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துதல்

(iii) இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் மற்றும் அக்கைத்தொழிலின் வியாபாரத்தை விழுமியங்களுடன் நடாத்துதல், மேம்படுத்துதல், வலுப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

(iv) இரத்தினக்கற்கள், விலைமதிப்புமிக்க மற்றும் பகுதியளவில் விலைமதிப்புமிக்க கற்கள், செயற்கை சேர்மானக் கற்கள், உலோகங்கள், தாதுப்பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் ஏதேனும் ஏனைய தாதுப்பொருட்கள் அல்லது ஏதேனும் பொருட்கள் என்பவற்றினை பரீட்சிப்பது தொடர்பாக கல்விசார் மற்றும் பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை நடாத்துதல்

(v) இரத்தினக்கல் மற்றும் ஆபரக் கைத்தொழிலுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய தொழில்நுட்பங்கள், முறைமைகள், இயந்திரங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் கருவிகளை அபிவிருத்தி செய்தல்.

(vi) சகோதர நிறுவனங்களுடன் இணைந்து, கூட்டிணைந்து சங்கமித்து வேலை செயவதற்காக அத்தகைய நிறுவனங்களுடன் பரஸ்பர உறவுகளை ஸ்தாபித்து அபிவிருத்தி செய்தல்.